SRI A. VEDARATHNAM: இதாப் பள்ளிகளுக்கு வராத பிள்ளைகளை அப்பள்ளிகளுக்கு வரச் செய்வதற்காக அப்பள்ளிகளில் மத்திய உணவு கொடுப்பதுபோல, இராப் பள்ளிகளுக்கு மாணவர்கள் வரும்படி கவர்ச்சி உண்டுபண்ணுவதற்காக அங்கு மாணவர்களுக்கு ஏதேனும் உணவு அளித்தால், பஜனை மடங்களில் சுண்டல் வினியோகம் செய்வதுபோல (சிரிப்பு) ஏதாவது வினியோகித்தால் அங்கு படிக்க நிறைய மாணவர்கள் வருவார்களே. அப்படி ஏதேனும் செய்ய அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: சர்க்கார் இதைப்பற்றி ஆலோசிப்பதற்கு முன் கனம் அங்கத்தினர் தம் பகுதியில் இத்திட்டத்தை ஆரம்பித்து நடத்தி இதன் பலன் என்ன என்பதைப்பற்றி சர்க்காருக்குத் தெரிவித்தால், பின்னர் சர்க்கார் இதைப் பரவலாக நடத்தலாமா என்று யோசிக்கலாம்.

SRI N. MARUDACHALAM: கோவையில் முதியோர் கல்வித் திட்டம் நடந்துகொண்டிருந்தபோது அங்கே பகலெல்லாம் வேலை செய்தவர்கள் இரவில் நடக்கும் பள்ளிக்கு வந்து படித்துக் கொண்டிருந்தார்கள். அங்கே இப்போது முதியோர் கல்வித் திட்டத்தை நிறுத்திவிட்டார்கள். அதை ஏன் நிறுத்தி விட்டார்கள் என்று தெரியவில்லை. சர்க்கார் அங்கே மறுபடியும் அப்பள்ளியைத் துவக்குவார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: வயதுவந்தவர்கள் பகலில் வேலைசெய்து களைத்துப்போன நிலையில் அங்கே வரும்போது அவர்களுக்கு உற்சாகம் இருப்பதில்லை. இளைஞர்களுக்காவது உற்சாகம் இருக்குமா என்பதற்காக இளைஞர்களுக்கு பாடம் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளிகள் கூடியவரையில் நன்றாக வேலைசெய்துவருவதாகத்தான் சர்க்காரின் கருத்து இருக்கிறது.

MR. SPEAKER: Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—CALLING ATTENTION TO IMMEDIATE SUSPENSION OF EVICTION PROCEEDINGS OF THE TIRUNELVELI DISTRICT BOARD AGAINST THE INHABITANTS OF CHATRAM LAND IN PAVOORCHATRAM, TENKASI TALUK.

MR. SPEAKER: I have received notice under rule 41 from the Hon. Member, Sri D. S. Authimoolam, calling the attention of the Hon. Minister for Home to a matter of urgent public importance, viz., immediate suspension of eviction proceedings of the Tirunelveli District Board against the inhabitants of Chatram land in Pavoorchatram, Tenkasi taluk. The hon. Member Sri Authimoolam will now speak.

## III.—POINT OF ORDER *RE* TRANSFER OF STARRED QUESTION TO THE UNSTARRED LIST.

SRI T. S. RAMASWAMI: Sir, on a point of order. My starred question regarding promotions in the Department of Statistics had been transferred to the Unstarred list. I want to know whether it was done at the intance of the concerned department or *suo motu*